மல்லிகைப்பூ மதுரையிலிருந்து சென்னைக்கு விமானமூலம் அனுப்ப இயலாமை

“ மதுரையிலிருந்து சென்னைக்கு தினந்தோறும் 1,000 கிலோ வரை
மு. ப. 10–30 ம கைப்பூ விமானம் மூலம் அனுப்பப்படுகிறது. அடுத்த மாதம் 15-ம் தே விருந்து இந்த விமான சர்வீஸ் இரவு நேரத்தில் மட்டும் செயல்பட இருப்பதால், மல்லிகைப்பூ அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டு மதுரை வட்டாரத்தில் மல்லிகைப்பூ தோட்டங்களை நடத்தி வருகிற நூற்றுக் கணக்கான குடும்பங்களின் பிழைப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.”

தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து ஒவ்வொரு நாளும், காலையிலே, 11-40 -க்கு புறப்பட்டு, சென்னைக்கு 1-40-க்கு வருகிறது விமானம்; அதில் மல்லிகைப்பூ அனுப்பப்படுகிறது. அதன் பிறகு அது பம்பாய்க்கும் கல்கத்தாவிற்கும் அனுப்பப்படுகிறது. இந்தியன் ஏர் லைன்ஸ் கார்ப்பொரேஷன் எப்ரல் 15-ம் தேதி முதல் இரவு $8\frac{1}{4}$ மணிக்குத்தான் வரும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மல்லிகைப்பூ உற்பத்தி செய்தும் விவசாயக் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை வரை 25 மைல் தூரத்திற்கு மல்லிகைப்பூ விவசாயம் நடைபெறுகிறது. இதிலே விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் நஷ்டம் ஏற்படும் நிலைமைகள் இருப்பதால், நம்முடைய அரசு ஏர் லைன்ஸ் நிறுவனத்தாரைக் கண்டு பேசி, இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்றும், அது பற்றி விவாதிக்க அவையை ஒற்றிவைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்து நம் அரசின் கீழ் இருக்கும் அலுவல் அல்ல. இதுபற்றி, அவர்களுக்கு முறைப்படி தெரிவித்து, கஷ்டங்கள் ஏற்படாமல் மாற்றம் செய்யலாமா என்று பார்க்க வேண்டியது அரசின் அன்றாட அலுவல்களில் ஒன்றாகும் என்பதால், அது ஒற்றிவைப்புத் தீர்மானமாக வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. கவன ஈர்ப்பு.

(i) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழையின்மையும் விளைச்சலின்மையும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

“ திருநெல்வேலி மாவட்டம் நான்குனேரி வட்டம் இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழை தவறியதன் காரணமாக நஞ்சை, புஞ்சை பயிர்கள் விளைச்சலின்றி கரிவு ஏற்பட்டிருப்பதால், அப்பகுதி மக்கள் வேலை வாய்ப்பு இன்றியும், உண்ண உணவுப் பொருள்கள் கிடைக்காமலும் அவதிப்படுகிறார்கள்.”

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை பொய்த்ததால் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இராதாபுரம் துணைவட்டத்தில் உள்ள பயிர்கள் கருகிப்போக அதன் விளைவாக அப்பகுதி மக்கள் வேலையின்றி, உணவின்றி அல்லல் படுகின்றனரென நாட்ட ஈர்ப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்தைச் சேர்ந்த இராதாபுரம் துணைவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை முழுதும் பொய்த்துவிட்டது. எனவே, இப்பகுதியிலுள்ள குடியானவர்கள் சீர்கேடான பருவ நிலைகளின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். புன்செய்ப் பயிர்கள் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தாலும் நன்செய்ப் பயிர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டிருப்பதாலும், இப்பகுதிவாழ் மக்களின் பொருளாதார நிலைமை மிகவும் சீர்கேடுற்றுள்ளது. அங்குள்ள உழவர்கள் தாங்கள் பயிரிட்ட சிறுதானியங்களையும் பயிர் வகைகளையும் தங்கள் சொந்த உபயோகத்திற்கே பெரிதும் பயன்படுத்திக் கொள்வர். எனவே

விற்பனை செய்யத்தக்க வகையில் உபரி தானியம் எதுவும் மிஞ்சாது. குடியானவர்களின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, இத்துணை வட்டப் பகுதியில் நன்செய் நிலங்களுக்கு இந்த பசலி யாண்டில் நிலத்தீர்வைத் தவணை மாதங்களாகிய 1968 பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்காகச் செலுத்தப்படத்தக்க நிலவரி வசூலை (செஸ் வரிக் கூடுதல் தீர்வை நீங்கலாக) கலெக்டர் 1968 மே திங்கள் வரை ஏற்கனவே ஒத்திப்போட்டுள்ளார். புன்செய் எனப் பதிவு செய்யப் பட்ட எல்லா நிலங்களுக்கும் அடிப்படைத் தீர்வை செலுத்துவதினின்றும் அரசாங்கம் விலக்களித்துள்ளதால், புன்செய்த் தீர்வை தள்ளுபடி குறித்த வினவுக்கு இடமில்லை. நன்செய் நிலங்கள் மீதான நிலவரி வசூலை 1968-ம் ஆண்டிற்குப் பின்பும் ஒத்திப்போடுவது குறித்தும் தற்போது செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைக் குறித்த நடப்பு நிலுவைகளை வசூலிப்பதில், " Go slow policy " என்று, " நிதானக் கொள்கை " யைக் கடைப்பிடிப்பது குறித்தும் செயற் குறிப்புகளை அனுப் புவதாகக் கலெக்டர் உறுதியளித்துள்ளார். அவை எதிர்பார்க்கப்படு கின்றன.

ரூ. 5,03,000 செலவு மதிப்பீட்டில் சிறு பாசனப் பணிகள், சாலைகள் போடுதல், குடிநீர்க் கிணறுகளையும் பாசனக் கிணறுகளையும் ஆழப் படுத்துதல் போன்ற பஞ்சத் துயர் தணிப்புப் பணிகளை வள்ளியூர், இரா தாபுரம், வட்டாரங்களில் தொடங்குவதென கலெக்டர் திட்டமிட்டுள்ளார்.

இத் துணை வட்டத்திலுள்ள மூன்று பேரூராட்சி மன்றங்களிலும் 43 கிராம ஊராட்சி மன்றங்களில் 17 ஊராட்சி மன்றங்களிலும் குடும்ப உணவுப் பொருள் பங்கீட்டு அட்டை மூலம் அரிசி வழங்கப்படுகிறது.

இத் துணை வட்டத்திலுள்ள மொத்த மக்கள் தொகை, 1,71,282 ஆகும். இதில், 1,03,492 பேருக்குக் குடும்ப உணவுப் பொருள் பங்கீட்டு அட்டை மூலம் அரிசி வழங்கப்படுகின்றது. இத் துணை வட்டத்திலுள்ள மற்றும் 27 கிராமங்களில் குடும்ப உணவுப் பொருள் பங்கீட்டு அட்டை மூலம் அரிசி வழங்கு உத்தரவு இடப்பட்டுள்ளது. அந்த 27 கிராமங் களும், அணைக்கரை, அப்புவிலை, மகாதேவன்குளம், வடக்கன்குளம், காவல்கிணர், வேப்பிலங்குளம், சௌந்தரபாண்டியபுரம், உடயத்தூர், டங்கர்குளம், அடங்கர்குளம், அலங்கிணர்-திருமலபுரம், அச்சம்பாடு, கோவங்குளம், கும்பிகுளம், சமூகரேங்கபுரம், கஸ்தூரிரங்கபுரம், இருக் கந்துரை, செட்டிகுளம், லேவிஞ்சிபுரம், கருங்குளம், பாலவூர், சிதம்பரபுரம்-ஜேகப்புரம், அவரைக்குளம், தெற்கு வள்ளியூர், கண்ணநல் லூர், ஆனைக்குளம், கோட்டைக்காரன் குளம், இணும் பரமேஸ்வரபுரம்.

வசூல் ஒத்திப் போடப்படும் நில வருவாய் தோராயமாக ரூ. 4,05,500 இருக்கும் என மதிப்பிட்டு இருக்கிறது. கடன் நிலுவை வசூலைப் பொறுத்தவரையில், அவற்றை மெதுவாக வசூலிக்க வேண்டும் எனக் கலெக்டர், வருவாய்த்துறை வாரியத்தின் மூலம் பரிவுரை அனுப்பி யிருக்கிறார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கடன் பணங்களைக் கிட்டிகட்டி வசூல் செய்கிறார்கள். தள்ளிப்போடுவதற்கு கண்டிப்பான உத்தரவைப் போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஏற்கனவேயே குறிப் பிட்டேன். இந்த மாதம் வசூலிக்க வேண்டியது மே மாதத்திற்குத் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. அதைத்தான் சொன்னேன், Go slow policy பின்பற்றப்படுகிறது என்று.

(ii) பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக் குறைப்பு.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தை மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—